Registered as a Newspaper　பக்கங்கள் 4　விலை ரூபா: 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்
The Eelanaatham　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 5　திருவள்ளுவர் ஆண்டு 2025　வைகாசி 19　02 - 06 - 1994　வியாழக்கிழமை　ஓசை 104

## அரசாங்கத்தின் சொத்துக்களால் அரசியல்வாதி வீடுகள் அலங்கரிப்பு

அரசாங்கத்திற்கு சொந்தமான அசையும் சொத்துக்கள் சில அரசியல்வாதிகளின் தனிப்பட்ட இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக கணக்காய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி பகுதியில் இருந்த அமைச்சுஒன்றின் அலுவலகம் அண்மையில் கொழும்பிலுள்ள இன்னுமொரு பகுதிக்கு மாற்றப்பட்ட போது மாநாட்டுமேசை, கதிரைகள், பூச்சாடித் தாங்கிகள், மின் விசிறிகள் உட்பட அமைச்சின் சொத்துக்கள் அரசியல்வாதி ஒருவரின் தனிப்பட்ட இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. 1989 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது அமைச்சிற்கு சொந்தமானதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# வெளிவிவகார அமைச்சர் ஹமீத் பதவி விலகவேண்டி நேரலாம்

## ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் உடன்பாட்டில் கையெழுத்திடாததன் எதிரொலி

[கொழும்பு]

**வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் பதவிவிலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. பெல்ஜியத்தின் தலைநகரான புருசெல்சில் ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு நிதி உதவி வழங்கும் 20 செயற்திட்டங்கள் தொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திடச் செல்லாமையால் உருவாகியுள்ள நெருக்கடியே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.**

ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவுடனான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு கடந்த 17 ஆம் திகதி புருசெல்ஸ் சென்று இருக்க வேண்டிய அமைச்சர் ஹமீத் அவ்வாறு செய்யத் தவறியிருப்பதால் 20 க்கும் மேற்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஐரோப்பிய நிதி உதவி கிடைப்பது பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. அதனைத் தொடர்ந்தே அமைச்சர் ஹமீத்திற்கு நெருக்கடி தோன்றியுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி காலை 11.00 மணியளவில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் 12 வெளி சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் அங்கு பிரசன்னமாக இல்லை. இதனைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த அமைச்சர்கள் கலைந்து சென்றனர்.

இதனைத் தொடர்ந்து புதுடில்லியிலுள்ள ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் தூதுக்குழு தலைவருக்கு எழுதப்பட்ட உத்தியோக பூர்வ கடிதமொன்றில் இத்தகைய ஒரு சந்திப்பு இவ்வருட முடிவிற்கு முன்பு கூட்டப்பட முடியாமல் இருப்பதை கொழும்புக்கு தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டிருந்தது இதே வேளைபுருசெல்சில் உள்ள சிறிலங்கா தூதுவர் நந்தா கொடகேயும் நடந்த சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி டி. பி விஜேதுங்கவிற்கு முழு அறிக்கையொன்றை அனுப்பி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சிறுபான்மையினர் பிரச்சினைக்கு முழுமையான தீர்வை வைக்கவில்லை

### சுதந்திரக்கட்சி செயற்குழு உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

1977-ம் ஆண்டு தொடக்கம் சிறுபான்மை மக்களின் வெறுப்படைந்து காணப்படுவதாகவும் சுதந்திரக்கட்சி செயற்குழு உறுப்பினர் கவ... சிங்கள வாராந்த பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி ...

## தேசியப்பட்டியல் எம். பி. சிறிசேன ராஜினாமா

ஐ. தே. கவின் தேசியப்பட்டியல் எம். பியான ஆர். ஏ. டி. சிறிசேன தமது இராஜினாமா கடிதத்தை நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி இல்லத்தில் வைத்து ஜனாதிபதி விஜேதுங்காவிடம் கையளித்தார்.

இராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி விஜேதுங்க கருத்து தெரிவிக்கையில் சிறிசேன சுயவிருப்பத்திலேயே இராஜினாமா செய்தார் எனவும் இதன் மூலம் அமைச்சரவையை மாற்றி அமைக்கக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார் சிறிசேன சக்திமிக்க இளம் தலைவர் தமது நலனை விட கட்சியின் நலனில் அதிக அக்கறை கொண்டுள்ளார் எனவும் ஜனாதிபதி பாராட்டினார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுவெடித்து பொலிசார் பலி

(கொழும்பு)

வெலிக்கந்த பொலிஸ் நிலையத்தில் கைக்குண்டுடன் நின்ற பொலிசார் ஒருவர் அக் கைக்குண்டு தவறுதலாக வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றதாக சிங்கள தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

## காமினி நடவடிக்கை குறித்து லலித் குழு கண்டனம்

(கொழும்பு)

''ஜனாதிபதி ஆட்சி முறையை காமினி திசாநாயக்கா எதிர்த்தார் இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டு அதனை ஆதரிக்கிறார் எதிர்கால ஜனாதிபதியென்று அவரை ஆதரவாளர்கள் வர்ணித்துள்ளனர்'' இவ்வாறு மேல்மாகாணசபை உறுப்பினரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித்குழு)யை சேர்ந்தவருமான எதிரிவீர பிரேமரட்ண திங்களன்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்

லலித்தின் கொலைக்கு ஐக்கிய தேசியக் கட்சியினரே

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனநாயக ஐ. தே. முன்னணிக்கு லலித்குழு உரிமைகோருகிறது

### சந்திரிகாவை ஆதரிக்கவும் முடிவு

(கொழும்பு),

''ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முதல் தலைவர் ஏ சி குணரத்ன, இரண்டாவது தலைவர் நான்தான் இருப்பினும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து எம்மை முற்றாக ஒதுக்க முறையற்ற விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது இதனை அனுமதிக்க எம்மால் முடியாது நாம் சட்டரீதியாகப் போராடுவோம்'' ''இவ்வாறு ரி. பி. ஜி. கலுகல்ல

முன்னாள் அமைச்சர் ரி. பி ஜி. கலுகல்ல ஏ. சி, குணரத்ன மேல்மாகாண்சபை உறுப்பினர் எதிரி வீர பிரேமரட்ண உட்பட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித்குழு) உறுப்பினர்கள் சிலர் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து தாமே உண்மையான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் என உரிமை கோரி, காமினிதிசாநாயக்கா, ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்டித்தனர்

இச்சந்திப்பிலேயே கலுகல்ல பத்திரிகையாளரிடம் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் கூறுகையில்:- இந்த நாட்டில் லலித்அத்துலத்முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினருக்கு அமோக ஆதரவு உள்ளது, லலித்தின் பெயரால் அவரது மனைவி சிறீமானி அத்துலத்முதலி மக்கள் முன்

11.00 மணியளவில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் 12 வெளியுறவு அமைச்சர் பெல்ஜியத்தின் தலைநகர் புருசெல்சில் அரைமணி நேரத்திற்கும் மேலாக காத்திருந்த போதும்

## சுதந்திரக்கட்சி செயற்குழு உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

1977-ம் ஆண்டு தொடக்கம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஒன்று வைக்கப்படவில்லை என்றும் இதனால் சிறுபான்மை மக்கள் மிகவும் வெறுப்படைந்து காணப்படுவதாகவும் சுதந்திரக்கட்சி செயற்குழு உறுப்பினர் கலாநிதி ஜீ எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்

சிங்கள வாராந்த பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார் அவர் தொடர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பீரங்கித் தாக்குதலால் குடியிருப்புகள் சேதம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் கடற் படையினர் நேற்றுக்காலை அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது கரையோரக் குடியிருப்புகள் சிலவும் ஒரு சில கட்டுமரங்களும் சேதமடைந்தன,

காங்கேசன்துறையில் இருந்து வெற்றிலைக்கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்த டோறா விசைப்படகு குடத்தனைப் பகுதிக்குச் சென்று 5.15 மணியளவில் மீண்டும் திரும்பி வந்தவேளை மீனவர்களை நோக்கி பீரங்கித் தாக்குதலையும் கலிபர் தாக்குதலையும் மேற்கொண்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அளவெட்டியில் மோதல் போராளி ஒருவர் வீரச்சாவு

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட திடீர்மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் மலையரசன் (கைலாஸ் (குமாரசிங்கம் செங்காதரன் திருகோணமலை, தற்போதைய முகவரி: கல்வயல் சாவகச்சேரி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



2-ம் லெப்
மலையரசன்
(கைலாஸ்)

## இருநேர பாடசாலைக்கு ஆட்சேபம்

# பல பிரபல பாடசாலை மாணவர் நேற்று வகுப்புக்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

இரு நேரப்பாடசாலையை ஆட்சேபித்து யாழ் குடாநாட்டில் பல பிரபல பாடசாலை மாணவர்கள் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர் இப்பகிஷ்கரிப்பு இரு கல்வி வலயங்களிலும் இடம் பெற்றது.

நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பித்த இப் பகிஷ்கரிப்பு நேற்று மேலும் பல பாடசாலைகளுக்குப் பரவியது இதனைத் தொடர்ந்து சில பாடசாலைகள் முழு நேரமாகவும் சில பாடசாலைகள் மதியத்துடனும் மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர்.

யாழ் நகரப் பாடசாலைகளில், யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரியைத் தொடர்ந்து, கனகரத்தினம் மகாவித்தியாலயம் மற்றும் வைத்தீஸ்வராக் கல்லூரி என்பனவும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

இதே சமயம், வலயம் இரண்டில், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி என்பனவும், மகாஜனக் கல்லூரியும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன வடம

(4ஆம் பக்கம் பார்க்க)

## இருநேரப் பாடசாலை குறித்து

# கருத்து விளக்கமும் கலந்துரையாடலும்

தற்போது நடைமுறையில் உள்ள பாடசாலை நேரம் பற்றிய ஒரு கருத்து விளக்கமும் கலந்துரையாடலும் நல்லூர் கல்வித்திணைக்கள வளவில் அமைந்துள்ள யா/சாதன பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை யாழ்தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார், இதற்கான அழைப்புக் கடிதங்கள் நல்லூர், யாழ்ப்பாணம், வேலணை,

(4ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

வலிகாமக் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கோயில் நிர்வாக சபையினருக்கும், தொழிற்சங்க நிர்வாக உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 4ஆம்திகதி காலை 9.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

★ ★ ★

வலிகாமக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து வர்த்த

( 4 ஆம் பக்கம் பார்க்க )

முடியாது நாம் சட்டரீதியாகப் போராடுவோம்'' ''இவ்வாறு ரி, பி ஜி கலுகல்ல தெரிவித்தார்

முன்னணியினர் என உரிமை கோரி, காமினிதிசாநாயக்கா, வடமேல் மாகாணமுதலமைச்சர் ஜீ. எம் பிரேமச்சந்திரா

அவரது மனைவி சிறீமானி அத்துலத்முதலி மக்கள் முன் சென்றால மக்கள் ஆதரவு

(4ஆம் பக்கம் பார்க்க)

# தந்தையாரின் கொலை குறித்து நாம் மௌனமாக இருக்கவில்லை

## பிரேமதாசாவின் மகள் துலாஞ்சலி

(கொழும்பு)

தந்தையார் கொலை செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாக நாம் மௌனமாக இருந்ததாக கூறப்படுவதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் ஏனெனில் அக் காலப் பகுதியில் நாம் பல வழிகளில் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் இது குறித்து தொடர்புகொண்டோம் என முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகள் துலாஞ்சலி ஜெய கொடி தெரிவித்துள்ளார்

நேற்று முன் தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாம் இது தொடர்பாக அதிகாரிகளுக்கு அனுப்பிய கடிதங்கள் யாவும் திரும்பி வந்தன தொலைபேசி அழைப்புகளுக்கு கூட ஒழுங்கான பதில்கள் கிடைக்கவில்லை அதிகாரிகளை சந்திக்க எடுத்த முயற்சிகளுக்கு அவர்கள் ஒத்துழைப்பு தரவில்லை. என அவர் தெரிவித்தார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசாங்கம் ஓராண்டு காலம் என்ன செய்யப்போகின்றது எப்படி நடந்து கொள்ளப்போகின்றது என்பதை பார்க்கும் நோக்குடன் எமது நடவடிக்கைகளை வெளியே பகிரங்கமாக நாம் தெரிவிக்கவில்லை. ஆனால் தற்போது உருப்படியான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளாமையினால் இவ்வாறு பகிரங்கமாக நாம் கருத்துக்களை தெரிவிக்கின்றோம் என தெரிவித்துள்ளார்,

## பிரேமதாசா கொலைநடந்த இடத்தை

# வன்முறையைதடுக்கவே நீரால் கழுவினோம்

ஜனாதிபதி கொலை செய்யப்பட்டதை கேள்விப்பட்ட பொது மக்கள் ஆத்திரம் அடைந்து வன்முறைகளில் ஈடுபடுவார்கள் என்ற பீதியின் காரணமாகவே அவ்விடத்தை இராணுவ பௌசர் மூலம் கழுவியதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்

அன்று விசாரணைத் தடயங்களைக் காப்பாற்றுவதைவிட வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதிலேயே நாம் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டி இருந்தது- எனவே தான் இவ்வாறான செயலை மேற்கொண்டோம்-

ஆனால் அவ்வாறு செய்ததால் விசாரணை பாதிக்கப்படும் என்று கூறமுடியாது என அவர் சுட்டிக்காட்டினார்-

# பொலிஸ் அதிகாரியின் கருத்து ஏற்புடையதல்ல

## பிரேமதாசா குடும்பத்தினர்

(கொழும்பு)

''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ள கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் இவ்வாறு ஒரு அதிகாரி பொறுப்பற்ற அறிக்கை விடுவது மிகவும் வேதனைக்கு உரிய விடயம் எனவும் பிரேமதாசா

(4 ம் பக்கம் பார்க்க)

## காமினி நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினராக பாராளுமன்ற உறுப்பினர் காமினி திசாநாயக்கா ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகைக்கு காமினி திசாநாயக்காவை அழைத்து இந் நியமனத்தை வழங்கி இருப்பதாக சிங்கள பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சண்முகம் தயானந்தனுடைய அடையாள அட்டை (இல. 622221764V) பர்சுடன் 30-5 94 இல் யாழ்ப்பாணத்திற்கும் இணுவிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ச. தயானந்தன், C/o, S சிவஞானம் முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (8431)

### தேவை

நல்ல நிலையிலுள்ள ருத்திர வீணை ஒன்று தேவை: தொடர்பு; திருமதி ஜெகசோதி ஜோசப் 'லக்கிஸ்ரோர்' இல 46, டசன் செபஸ்தியன் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம். (8428)

### தவறிவிட்டது

ஞா.தவராணி ஆகிய எனது தங்க அட்டியலும், காதுச் சிமிக்கியும் நாவற்குழிச் சந்தியிலிருந்து கண்டி வீதியால் வரும் நவில்ட் பாடசாலை செல்லும் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வா; அருந்தவபாலன், கைதடி மேற்கு, கைதடி என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும்- தகுந்த சன்மானம் வழங்கப்படும்- (8442)

## 16 விவசாயிகள் தற்கொலை

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் வட்டிக்காக கடன் வாங்கி தமது கடனை மீளச்செலுத்த முடியாத விவசாயிகள் தற்கொலை செய்வது அதிகரித்து இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 16 விவசாயிகள் இவ்வாறு தற்கொலை செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. பெரும் மழையால் நெற்செய்கை பாதிக்கப்பட்டு இருப்பதும், அரசு போதிய நிவாரணங்கள் வழங்காமையும் சுட்டிக்காட்டப்பட்டதாக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

## குவைத் தொழிலாளருக்கு இருவாரத்தில் நட்டஈடு

(யாழ்ப்பாணம்)

வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான நட்டஈடுவழங்கல் இரண்டு கிழமைகளுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கென சுமார் 750 கோடி ரூபாய் தேவைப்படுகின்ற போதிலும் தற்சமயம் 15 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந் நட்டஈடு வழங்கல் தொடர்பான மேலதிக விபரங்களை இலங்கை வெளிவிவகார அமைச்சு பாதிக்கப்பட்டவர்களின் முகவரிகளுக்கு அனுப்பி வைத்து வருவதாக தெரியவருகின்றது.

## தொடர்ந்து தார் எடுத்துவர யாழ் மாநகரசபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையினால் புனரமைப்புச் செய்யப்படுகின்ற அதன் எல்லைக்குட்பட்ட வீதிகள் கட்டம்கட்டமாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமான புனரமைப்பு தற்சமயம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட 300 பரல் தாரையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

கொழும்பில்இருந்துஎடுத்து வரப்படவுள்ள 300 பரல் தாரும் வந்து சேர்ந்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகமாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் 300 பரல் தார் வீதம் சுமார் மூன்று தடவை கொழும்பில் இருந்து யாழ் மாநகர சபைக்கு இன்னமும் எடுத்து வரப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதற்கென றுகுணு கப்பலில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன (பா)

## பாதாள உலகத்தவரே நாட்டை நிர்வகித்தனர்

### தென்மாகாணசபை முதலமைச்சர்

(கொழும்பு)

இந்த நாட்டை பாதாள உலக சமூக விரோதிகளே பரிபாலித்து வந்துள்ளனர் என்று தற்போது வெளியாகும் சம்பவங்கள் நினைக்க வைக்கின்றன. சிலர் பல்வேறு பெயர்களை வைத்து அப்பாவி இளைஞர்களை சண்டியர்களாகவும் கொலைஞர்களாகவும்மாற்றி அவர்கள் மூலம் காரியங்களைச் சாதித்து விட்டு இன்று அந்த இளைஞர்களைக் காட்டிக்கொடுக்க முயல்கின்றனர். என தென்மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறினார்.

கடந்த 17 வருடமாக மக்களை நோக்கித் திரும்பி இருந்த துப்பாக்கி ரவைகள் இப்போது தென்மாகாண மக்களின் வாக்குகளால் ஆட்சியாளர்களை நோக்கித் திரும்பியிருக்கின்றன. ஜனசக்தி எனக்கூறி மக்களை ஆயுதங்களால் பரிபாலித்து வரும் காடைத்தனமான அரசியல் யுகத்தை முடிவுக்குக் கொண்டுவர முதல்வெற்றி வெடி முழக்கம் வைத்த தென்பகுதி மக்களை நாடு கௌரவிக்கின்றது என்றும் அவர் கூறினார்.

## சிரமதானம்

எதிர்வரும் 05ஆம் திகதி தியாகி பொன் சிவகுமாரனின் 20ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவர் தீயுடன் சங்கமமான உரும்பராய் வேம்பன் மயானமும் கிணறும் சிரமதான மூலம் கடந்த 22ஆம் திகதி உரும்பராய் ஊரெழு சனசமூக நிலையங்களினால் உரும்பராய் தெற்கு கிராமசேவையாளர் தலைமையில் துப்புரவு செய்யப்பட்டது

சிரமதானம் உரும்பராய் - ஊரெழு சனசமூக நிலைய சமாசத்தினால் ஏற்பாடு செய்

## கும்பாபிஷேகம்

மட்டுவில் வடக்கு மகா முத்துமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை

## உலகின் முதன்மை நாடாக தமிழீழம் திகழவேண்டும்

### தமிழீழ அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர்

''இன்று எமது விடுதலைப் போராட்டம் உலகத்திலேயே முதன்மை பெற்ற போராட்டமாக உள்ளது. அதுபோல உலகத்திலேயே முதன்மை நாடாகத் தமிழீழம் திகழ வேண்டும், வசதியற்ற, நலிந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க அரசாங்கம் முனைகிறது. நாடு உருவாகும் வரை போராட்டம் தொடரும். இந்த நிலையைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். எமது தேசியத் தலைவர் அவர்கள் போராட்டத்தின் வெற்றியைப் பலவிதங்களில் நிரூபித்துக் காட்டியுள்ளார்''இவ்வாறு 24 05-1994 மாலை வலிகாமம் கோட்ட அரசியல் பொறுப்பாளர் செல்வி கோமதி தலைமையில் நடைபெற்ற கிராமியப் பாசறையும் கண்காட்சியும், ஐந்தாம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் குறிப்பிட்டார்.

ஐந்து நாட்களாக நடைபெற்ற தொடர்நிகழ்ச்சிகளில் ஒன்றாக வலிகாமம் கோட்டத்தில் வதிவிட வேளாண்மைப் போட்டி, உற்பத்தி எழுச்சி வாரப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது-

பரிசில் வழங்கும் நிகழ்ச்சிக்குத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வலிகாமம் கோட்ட இணைப்பாளர் தலைமை தாங்கினார்

தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் பரிசில் வழங்குவதை ஆரம்பித்து வைக்க, யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி, மேலதிக அரசாங்க அதிபர் உட்பட பல திணைக்கள, முதன்நிலை உத்தியோகத்தர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர், விவசாயப்பகுதி பொதுமுகாமையாளர் யாழ் மாவட்ட இணைப்பாளர் ஆகியோரும் பரிசில்களை வழங்கி கௌரவித்தனர்.

எமது மண்மீட்புப்போராட்டமானது, தனியே துப்பாக்கி ஏந்தி போராடுவது மட்டுமல்லாது பொருண்மியத்தையும் கட்டி எழுப்ப வேண்டிய தேவை இருப்பதாகவும்,இதற்காகவே, உற்பத்தியை பெருக்கவும், மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருவதாகவும், இந்த போட்டிகளில் மக்கள் பங்குபற்றியமையும், இங்குள்ள மக்கள் கூட்டத்தையும் பார்க்கும் போது இது ஒரு மக்கள் போராட்டமாக மாறும் - மாறிக்கொண்டிருக்கின்றது என நம்பக் கூடியதாக இருப்பதாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, விவசாயப்பகுதி பொதுமுகாமையாளர் பேசும் போது குறிப்பிட்டார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 06-02 வியாழன்இரவு

08.01 - செவ்வுங்கள் பார்க்கலாம்

08.10 - உலக - தமிழ் மொழியின் எதிர்காலம்

08 20 - உழைப்போம் உயர்வோம் -நிகழ்ச்சியில் நேர்காணல் இடம்பெறும்

08.30 - செய்திகள்

08 40 - ஏட்டிலிருந்து நிர்வாகக் கலையைத் தெரிந்து கொள்ளுங்கள் என்றநூலிலிருந்து 'ஒருங்கிணைப்பு' எனும் கட்டுரையின் சில பகுதி

08 50 - ஒப்பரேஷன் ஏழு சக்திகள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''தோல்வி காணும் சிங்களப் படை''

1994 06-03 வெள்ளிகாலை

07 02 - மாவீரவணக்கம்

07.15 - விடுதலை கானங்கள்

07.30 - செய்திகள்

07 35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

உ
சிவமயம்

## நினைவு கூருகின்றோம்...

## 02.06.1994

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னம்பிட்டியில் சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன 34 தமிழர்கள்:

1986ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

சுட்டுக்கொல்லப்பட்ட பின் மட்டு-கிரான் ஆற்றில் வீசப்பட்ட 03 தமிழர்கள்:

திருமலை - செல்வநாயகபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 12 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் எட்டாவது நாளாக சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட 15 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை- காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

உமேஷ் (பாலகிருஷ்ணன் மகேஸ்வரன்- கோட்டைக்கல்லாறு- மட்டு)

வல்வெட்டித்துறை - வேம்படிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

வடமராட்சிப் பொறுப்பாளர்,

மேஜர் சுபாஸ் (சின்னக்குட்டி நல்லராசன் (பழம்)- இமையாணன், உடுப்பிட்டி - யாழ்)

1991ஆம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

வினோ (பூரணவேலுப்பிள்ளை தனராஜ்- தனிப்பனைக்குடியேற்றம் - வல்வெட்டித்துறை)

மட்டு- பெரியபோரதீவுப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொலைப்பட்ட 03தமிழர்கள்.

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள கூழாங்குளம் பகுதியிலுள்ள தமது வீட்டைப் பார்வையிடச் சென்று காணாமல்போன தந்தை, பத்துவயது மகன் மற்றும் கூடச்சென்ற இளைஞன் உட்பட 03 தமிழர்கள்,

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9569)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காங்கேசன் நகரில் உள்ள சிறிலங்கா இராணுவ, கடற்படை கூட்டு முகாமிலிருந்து கடந்த 30ஆம் திகதி இரவு 9 மணியளவில் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இவ் எறிகணைகள் சுழிபுரம், பொன்னாலை, மூளாய், அராலி ஆகிய பகுதிகளின் பல பொது இடங்களில் வீழ்ந்து வெடித்தன. மேலும் 31ஆம் திகதியும் இரவு இதேநேரம் மேற்படி பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சினை ஆயுதப்படையினர் மேற்கொண்டனர். இவ்விரு சம்பவங்களிலும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகிறது. (41)

யாழ். பல்கலைக்கழகம்

### மகாபொலக் கொடுப்பனவு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான 4ஆம் தவணை பணம் 06-06-94 முதல் யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் இபற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளது,

பதிவாளர்

(சி-9572)

சிரமதானம் உருப்பிராய்-ஊரெழு சனசமூக நிலைய சமாசத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

முத்துமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

## ஆங்கில ஆசிரியர் நியமன போட்டிப்பரீட்சை விரைவில்

(கொழும்பு)

பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்காக நடளாவிய ரீதியில் ஆயிரம் ஆங்கில ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை ஜூன் 11 ஆம் திகதி நடைபெறும். இப்பரீட்சைக்குவிண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழிமூல பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிறைவு செய்ய மேலும் 1000 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர். இது தொடர்பாகவும் விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## மண்ணின் தாகம் முதலிடம்

(தொல்புரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இல்லங்களுக்கு இடையிலான நாடகப் போட்டி அண்மையில் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நாடகப்போட்டியில் ''மண்ணின் தாகம்'' என்னும் சரித்திர நாடகம் முதலாம் இடத்தையும், 'உள்ளத்தின் நல்ல உள்ளம்'' என்னும் நாடகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. (41)

## பின்தங்கிய கிராமங்கள்; ஆய்வறிக்கை தயாரிப்பு

பின்தங்கிய கிராமங்களை மேம்படுத்தும் நோக்குடன் யாழ் மாவட்ட அரசியல் துறையினரால் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றாக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு கிராமங்களில் நடைபெற்ற கிராமிய பாசறைக்கு வேண்டிய புள்ளி விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின் புள்ளிவிபரக்கிளையானது திரட்டி இக் கிராமங்கள் பற்றிய ஆய்வறிக்கையையும் தயாரித்துள்ளது.

இந்த அறிக்கை சனத்தொகை, பால், வயது, விவாக அந்தஸ்து, தொழில், மதம், 17 வயதுக்கு மேற்பட்டோர் விபரம், மொழி அறிவு, பாலர் பாடசாலை, பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயிலுவோர் விபரங்கள், வீட்டு வசதி, கால்நடை, பயனுள்ள மரங்கள், வாகனங்கள், உழவு இயந்திரங்கள் போன்ற விபரங்களும், விவசாயம் செய்யப்படும் நில அளவு, செய்யப்படும் பயிர் வகை, வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வோர், போசாக்குக் குறைந்த பிள்ளைகள், வன்செயலால்பாதிக்கப்பட்டோர், உண்டான சேத விபரங்கள், விதவைகள், அங்கவீன முற்றோர், போன்ற விபரங்கள் அடங்கியதாக அமைந்துள்ளது

உ

சிவமயம்

## அந்தியேட்டி-வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



03-05-1994 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரும், சாந்தி விலாஸ் உரிமையாளருமான

அமரர்

### திரு. வே. சண்முகவேல் (சண்முகம்)

அவர்களின் அந்தியேட்டி 01-06-1994 புதன் கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 02-06-1994 வியாழக் கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி, மக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள்.

185/1, கின்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(8435)



தமிழீழ விடுதலைப் புலிகளின்
வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும்
வடமராட்சி பதில் பொறுப்பாளருமான

### மேஜர் சலாம் அவர்கள்
### (வ.சி.நல்லராசன் (பழம்) இமையாணன்)

| தமிழ்த்தாய் கரங்களில்: | தமிழர் தம் மனங்களில்: |
|---|---|
| 17 - 09 - 1956 | 02 - 06 - 1988 |

மனைகள் அழுது, கண்ணீர் நடந்த - சுவடுகள்
தெரியுதடா!
நினைவுகள் இங்கே, '' குப்பி தின்ற '' உன் திருமுகம்
தேடுதடா!
தேசம் சிந்திடும் குருதித்துளியிலும், உன் முகம்
தெரியுதடா!
கோசம் செய்தே தலைவன் தானை உன் பாதை
தொடருதடா!
உன்னுடன் எரிந்ததால், சந்தன விறகிங்கே
பெருமைகள் கொள்ளுதடா!
மண்ணுடன் சேர்ந்த உன் உடல் அன்று மரணத்தை
வென்றதடா!
கனவினில் நீ கண்ட ஈழத்திற்கிங்கே பிரசவ காலமடா-
உணர்வுகளோடு காலந்தோறும் உன் பெயர் வாழுமடா!

- குடும்பத்தினர்.

தமிழ் வளர் சோலை,
இமையாணன், உடுப்பிட்டி.

(8432)

நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...நூலகம்.

### சிந்தனைக்கு

ஆடை எரியாமல் மடியில் நெருப்பை கட்டமுடியாது;
பாதம் பொசுங்காமல் சுடும் தழலில் நடக்கமுடியாது.
- வீவிலியம்

ஈழநாதம்

11, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## டி. பி. இன்னும் மேலே வர வேண்டும்

வடக்கு - கிழக்குப் பிரச்சினை இலங்கையில் இன்றுள்ள முக்கிய பிரச்சினை மட்டுமல்ல, சிக்கலான பிரச்சினையும் கூட. இது அண்மைக் காலத்தில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தபோதும், திடீரென பதவிக்கு வந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை.

ஆனால், தற்பொழுது சுமார் ஒருவருட காலத்தின் பின்னர் அவர் இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. ''இன்று அரசாங்கமும் நாமும் முகம் கொடுத்துள்ள முக்கிய பிரச்சினை வேலையற்றோர் பிரச்சினையல்ல வடக்கு - கிழக்குப் பிரச்சினையே ஆகும்'' என டி. பி. விஜேதுங்கா இப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் பிரதிபலித்துள்ளார்.

கடந்த ஒருவருட காலத்தில், வடக்கு - கிழக்கில் இடம்பெறுவது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்றும், அது இலங்கையின் எங்கோ ஒரு மூலையில் நடைபெற்று வருவதாகவும் இதனால் அரசிற்கு பெரும் பாதிப்பு ஏதும் இல்லை என்பது போன்றுமே டி. பி. விஜேதுங்கா காட்டிக் கொள்ள முனைந்தார், ஆனால், அரசியலிலும், இராணுவ ரீதியாகவும் இடம்பெற்ற சம்பவங்கள் அவர் இதனைத் தவிர்க்க முடியாது ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையை இன்று ஏற்படுத்தியுள்ளது சுருக்கமாகக் கூறுவதானால், டி. பி. விஜேதுங்கா இதனை ஏற்றுக் கொண்டார் என்பதை விட ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது என்பதே உண்மை நிலையாகும்.

டி. பி. விஜேதுங்கா இவ்வாறு ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தமைக்கு பல காரணங்கள் உண்டு. சிறிலங்காவின் பொருளாதாரத்தில் இருந்து சகல துறைகளிலும் வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் இனப் பிரச்சினையின் தாக்கம் பிரதிபலிக்காமல் இல்லை. குறிப்பாக பொருளாதாரத்தில் அதன் தாக்கம் உயர்வாகவே உள்ளது. இராணுவச் செலவிற்கென பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்வதினால் ஏனைய துறை

# வட-கிழக்கு பிரச்சினையை தீர்க்க ஐ. தே. கவால் முடியாது

### மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினையை ஏன் தீர்க்க முடியாது? அது தீர்க்கக்கூடிய பிரச்சினை; ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியினால் இப்பிரச்சினைக்கான தீர்வை காணமுடியாது என மலையக மக்கள் முன்னணி தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

''லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில் அரசாங்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதிலாக அதனை மேலும் சிக்கலாக்கியுள்ளது. எனவே நீண்ட காலமான இப் பிரச்சினை இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அரசியல் கண்ணோட்டத்தில் நேர்மையான பேச்சுக்கள் மூலம் மட்டுமே இதனைத் தீர்க்க முடியும்.

வடக்கு - கிழக்கு தேசிய பிரச்சினையாக இருப்பதாக இன்று முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ள ஒரு விடயம். ஜனாதிபதி இது தொடர்பாக கூறுகையில் இது ஒரு பயங்கரவாத பிரச்சினை மட்டும் என கூறுகின்றார் நான் கூறுகின்றேன் இது ஓர் அரசியல் பிரச்சினை எனவே அரசியல் ரீதியிலே தீர்க்கப்பட வேண்டும்.

## பொது இணக்கம்காண தொண்டா - அஷ்ரப் பேச்சு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காணும் முகமாக நேற்று அமைச்சர் தொண்டமான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப்பை சந்தித்து பேசினார்.

இவர்கள் இருவரும் ஏற்கனவே இரு சுற்று பேச்சுக்களை முடித்துள்ளனர். மூன்றாவது சுற்று பேச்சுக்களே நடைபெறுகிறது தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் கருத்துக்களை திரட்டி பொதுவான திட்டம் ஒன்றை அரசிடம் சமர்ப்பிக்க தொண்டமான் திட்டமிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் மாறிமாறி பேசிவருகிறார்.

## சந்திரிகாவிடம் தலைமை ஒப்படைக்க கோரிக்கை

### கட்சி உறுப்பினர்கள் மகஜர்

(கொழும்பு)

கட்சியின் தலைமையை சந்திரிகா குமாரணதுங்காவிடம் ஒப்படைக்குமாறு கோரி பெருமளவிலான சுதந்திரக் கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு கையெழுத்திட்டு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இதேசமயம் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ நின்றால் அது ஐ. தே. க. விற்கு சாதகமாகிவிடும் என சில முன்னணி சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## பாஸ்கரலிங்கம் மருத்துவ லீவில்

### மீண்டும் வெளிநாடு செல்ல திட்டம்

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் கடந்த வியாழனன்று நாடு திரும்பினார் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருந்த இவர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை சந்தித்துப் பேசினார்.

வெளிநாட்டில்தான் பெற்று வரும் சிகிச்சையை தொடர்வதற்காக மேலும் இருமாத மருத்துவ லீவு இவர் கோரியுள்ளார்.

## தேர்தலில் வெற்றி பெற புத்திஜீவிகள் குழு அமைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வெற்றிபெறும் நோக்குடனும் தற்போதைய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பைப்பெறும் நோக்குடனும் புத்திஜீவிகள் குழு (Think Tank) உடனடியாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது

கலாநிதி கொடிபிலி குணதிலக்க மற்றும் ஜனசவிய நிதியத்தின் சரித்தரத்வத்தை, கொள்கை திட்டமிடல் பகுதியைச் சேர்ந்த செல்டன் வனசிங்க உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எம். டி. டி. பீரிஸ் உட்பட மேலும் பல புத்திஜீவிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

## விடைத்தாள்கள் வந்தன

(வடமராட்சி)

யாழ். தொழில்நுட்ப கல்லூரி இறுதிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தன

மேற்படி பரீட்சை எதிர்வரும் 6 ம் திகதி நடைபெறவுள்ளது. மற்றும் தேசிய கல்வி பொதுத் தராதர சான்றிதழ்களும் எடுத்து வரப்பட்டன [யோ]

## அங்குரார்ப்பணக் கூட்டம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்திப்பகுதியின், ஏற்பாட்டால் கடந்த 25-ம் திகதி அன்று காலை தொல்புரத்தில் சிவகௌரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவன பிரதிநிதிகளும், கூட்டுறவு திணைக்கள உத்தியோகஸ்தர்களும், கடற்றொழில் பரிசோதனை உத்தியோகத்தர்களும் பொதுமக்களும், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### சம்பள உயர்வு கோரி

## 25,000 தபால் ஊழியர் கொழும்பில் மறியல்

(கொழும்பு)

சம்பள உயர்வைக்கோரி பல தொழிற்சங்கங்கள் கூட்டாக சில அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரு தேர்தல்களை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வாறான எதிர்ப்புகள் அரசாங்கத்திற்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தபால் தொலைத்தொடர்பு திணைக்களத்தைச் சேர்ந்த இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் நேற்று மறியலில் இறங்கியதாகவும் இதனைத் தொடர்ந்து கொழும்பு நகரம் பதற்றம் அடைந்ததாகவும் கலவரம் அடக்கும் பொலிசார் கூடைகள், கண்ணீர்ப் புகைக்குண்டுகள், குண்டாந்தடி போன்றவற்றுடன் பல வாகனங்களில் வரவழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி மறியல் நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கமய மட்டும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவருகின்றது.

## உதவிப்பணம் கொடுப்பனவு

[தொல்புரம்]

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொதுமாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஏப்பிரல் மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

மேற்படி பணம் சுழிபுரம் தபால்அலுவலகத்தில் இயங்கி வரும் காரைநகர் அஞ்சலகக் கிளையிலும், வண்ணார் பண்ணை உபதபால் அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் தபால் அலுவலகத்திலுள்ள ஊர்காவற்றுறைதபால் நிலையத்திலும், கைதடி விடத்தல் பளை உபதபால் நிலையத்திலும் வழங்கப்படுகின்றன. (41

## பிரதமர் ரணிலை வரவேற்க மூவரே சென்றனராம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தென்சொரிய நாட்டுக்கான பயணத்தை மேற்கொள்ளும்போது கொழும்பு மாவட்ட கம்பஹாமாவட்ட அமைச்சர்களும், உறுப்பினர்களும் வழியனுப்பி வைத்ததாகவும் வரும்போது மூவர் மட்டுமே வரவேற்க சென்றிருந்தனர்.

இதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் எதிர்காலம் குறித்த சர்ச்சை எழுந்துள்ளதாகவும் ரணில் அரசியல் தொடர்பாக மனம் குழப்பம் அடைந்து காணப்படுவதாக இவரின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர்களான ஜோன் அமரதுங்கா, தர்மதேவ ஜயசிங்க, இராஜாங்க அமைச்சர் இருவருமே இவரை வரவேற்க சென்றிருந்தனர்.

### நீர்கொழும்பு நீதிமன்றில் கொலைப்படுக...

## சமிந்தவை உபாலிக்கு இனம் காட்டியது பொலிஸ்

(கொழும்பு)

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் மரணம் அடைந்த சமிந்த என்பவரை சொத்தி உபாலிக்கு இனம் காட்டியது பொலிஸ் உயர் அதிகாரியொருவர் எனத் தற்போது தெரியவந்துள்ளது.

புறக்கோட்டையில் இருந்து கடுவெல பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றப்பட்ட இவ் உயர் பொலிஸ் அதிகாரி சமிந்தவைக் காட்டி இவரை நல்ல முறையில் கவனிக்குமாறு சொத்தி உபாலிக்கு கூறியுள்ளாராம்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சொத்தி உபாலிக்குத் தொடர்பு உண்டு எனப் பொலிசார் சந்தேகித்து வருகின்றமை தெரிந்ததே.

குறிப்பாக பொருள தாரத்தில் அதன் தாக்கம் உயர்வாகவே உள்ளது. இராணுவச் செலவிற்கென பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்வதினால் ஏனைய துறைகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. இதன் கர்ரணமாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தான் எதிர்பார்ப்பது போன்று சிறிலங்காவை வழி நடத்திச் செல்ல முடியாதவராகவுள்ளார். இந்நிலையில் தனது நோக்கங்களுக்கு தடையாகவுள்ள பிரச்சினை குறித்து அவர் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

ஆனால், டி. பி. விஜேதுங்கா வடக்கு - கிழக்குப் பிரச்சினை முக்கிய பிரச்சினை என ஏற்றுக் கொண்டாலும், இன்னும் சிலவற்றை அவர் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவில்லை என்பதும், சிலவற்றிற்குப் பதில் கூறவில்லை என்பதும் உண்மையாகும். இப்பிரச்சினை ஓர் இனப்பிரச்சினைதான் என்பதை அவர் இன்றும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. அதாவது, தமிழர் தேசிய இனப்பிரச்சினையை வடக்கு - கிழக்குப் பிரச்சினை எனச் சுட்டும் டி. பி. விஜேதுங்கா இப்பிரச்சினைக்கான தீர்வு எது என்பதையும் குறிப்பிடவில்லை.

இந்நிலையில் டி. பி விஜேதுங்கா வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எனச் சுட்டியமையானது, இராணுவத் தீர்வா அல்லது அரசியல் தீர்வா என்பது குறித்து தெளிவான பொருள் கொள்ள முடியாத நிலையே உள்ளது. இவ்வாண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களை வைத்து நோக்கும்போது டி. பி. விஜேதுங்கா இப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு குறித்து சிந்திக்கக் கூடும் எனக் கருதவும் இடமுண்டு. ஆனால், அரசு ஈடுபட்டு வரும் போராயத்தங்களை நோக்கும்போது அரசியற் தீர்வு என்பதை விட இராணுவ தீர்வு பற்றியே அரசாங்கம் அதிகம் சிந்திப்பதாக எண்ண வேண்டியுள்ளது.

ஆனால், இன்றையநிலையில் டி. பி. விஜேதுங்கா வடக்கு - கிழக்குப் பிரச்சினைத் தீர்வில் காமினி திசாநாயக்காவை வெகுவாக நம்பி இருப்பதாகவும் அவர் ஒரு தீர்வை ஏற்படுத்துவார் எனப் பூரணமாக கருதுவதாகவும் அறியமுடிகிறது. ஆனால், இவ் விடயத்தில் டி. பி. விஜேதுங்கா யாரை நம்பினாலும், யாரை பொறுப்பில் நியமித்தாலும் அவரின் இன்றைய நிலைப்பாட்டில் இன்னமும் மாற்றம் தேவை. வடக்கு - கிழக்கு பிரச்சினை முக்கியமானது என்பதுமட்டுமல்ல இது ஒரு தேசிய இனப்பிரச்சினை என்பதையும் டி-பி- விஜேதுங்கா ஏற்றுக் கொள்ளும்போதே அவரால் இப் பிரச்சினைக்கான தீர்வை அணுக முடியும். அதாவது டி- பி- விஜேதுங்கா இன்னமும் பலபடி மேலே செல்லவேண்டியுள்ளது.

---

...யாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது

புத்திஜீவிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

...தர்களும் பொதுமக்களும், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

...புறக்கேட்டையில் இருந்து கடுவெல பொலிஸ் நிலையத்...

...எனப் பொலிசார் சந்தேகித்து வருகின்றமை தெரிந்ததே.

---

## ஜெருசலம் அருகே இஸ்ரேல் ஊரடங்கு பிறப்பிப்பு

### இரு பாலஸ்தீனியர் சுட்டுக்கொலை

(ஜெருசலம்)

பாலஸ்தீனியர்கள் இருவர் இஸ்ரேலிய உள்ளகப் பாதுகாப்புப் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஜெருசலம் அருகிலுள்ள பகுதியில் ஊரடங்குச் சட்டம் இஸ்ரேலினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன கிளர்ச்சி இயக்கமான ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்தவர்களே சுட்டுக் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் வானொலி தெரிவித்தது, எனினும் சதாரண உடையில் வந்த இஸ்ரேலியர் ஆயுதமற்றவர்களைச் சுட்டுக் கொன்றதாக பாலஸ்தீனியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## ஐ.நா. அமைதிப்படை வீரர் றுவாண்டாவில் மரணம்

(கிகாலி)

றுவாண்டாவில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் ஐ நா. அமைதிப்படையைச் சேர்ந்த செனிகல் நாட்டு கப்டன் ஒருவர் பலியாகியுள்ளார். இதனையடுத்து அங்கு ஐ நா. அமைதிப்படை தனது செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது

இதே சமயம் அகதி முகாம் ஒன்றில் 500 பேர் கொல்லப்பட்டதாக வெளியான செய்திகள் குறித்து எதுவும் ஊர்ஜிதம் செய்யக்கூடிய தகவல் கிடைக்கவில்லை என ஐ நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

## லத்தீன் அமெரிக்காவில் ராடர் கண்காணிப்பு

### அமெரிக்கா திட்டம்

(வாஷிங்டன்)

லத்தீன் அமெரிக்க நாடுகளில் போதைப் பொருள் கடத்தல் காரர்களை விமான மூலமான ராடர்கள் மூலம் கண்டறிந்து அந்நாடுகளுக்கு அறிவிக்க அமெரிக்கா மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

4 வருடங்களின் முன்பும் இவ்வாறு அமெரிக்கா இத்திட்டத்தை லத்தீன் அமெரிக்க நாட்டு அரசுகளுக்கு அறிவித்தபோது பெரு அரசும் கொலம்பியா அரசும் இத்திட்டத்தை நிராகரித்ததுடன் தமது நாட்டிற்கு மேலாக பறக்கும் இனந் தெரியாத விமானம் எதுவும் சுட்டு வீழ்த்தப்படும் எனவும் எச்சரித்தன இதையடுத்து அமெரிக்கா அப்போது தனது திட்டத்தை கைவிட்டதுகுறிப்பிடத்தக்கது.

லத்தீன் அமெரிக்கா நாடுகளில் இருந்தே அமெரிக்காவிற்குள் அதிகளவில் போதைப் பொருள் கடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## செக். ஆயுதங்களை பெற சிலி ராணுவ தளபதி விஜயம்

### வருகைக்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பு

(பிரஹா)

சிலியின் இராணுவத் தளபதியும் முன்னாள் இராணுவ சர்வாதிகாரியுமான அகஸ்டோ பினோட்சே செக் குடியரசுக்கு விஜயம் செய்துள்ளார். சிலி இராணுவத்திற்கு தேவையான ஆயுதக் கொள்வனவு தொடர்பாகவே அவர் செக் குடியரசு சென்றுள்ளார்

செக் நாட்டின் இராணுவ தொழில்நுட்பத்தைப் பெறுவது குறித்தும் சிலி இராணுவத் தளபதி பேசுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. செக் குடியரசின் பத்திரிகையாளர்களும், தொழிற்சங்கங்களும் இவரின் வருகையை எதிர்த்துள்ளன. இவரே தனது 17 வருட ஆட்சியில் பல சிலி மக்களினது படுகொலைக்கு காரணமாக இருந்தவர் என அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேசமயம் செக் குடியரசின் உள்துறை அமைச்சர் தாம் சிலி தளபதிக்கு நாட்டிற்குள் வர விசா வழங்கவில்லை எனவும் இது பின்னர் வாபஸ் பெறப்பட்டு விட்டதாகவும் கூறினார்.

## ஏடன் மீதான தாக்குதல் வடயேமன் அதிகரித்தது

### ஐ.நாவின் நிர்ப்பந்தத்தை தவிர்க்க முயற்சி

(ஏடன்)

தென்யேமன் தலைநகர் மீதான தமது முற்றுகையை வடயேமன் துருப்புகள் மேலும் இறுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஏடன்மீதான இத்துருப்புகளின் தாக்குதல் தற்போது அதிகரித்துள்ளது. ஐ.நா. பாதுகாப்புச்சபை போர் நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு வடயேமனை நிர்ப்பந்திப்பதற்கு முன்பாக தென் யேமனை கைப்பற்றி விடுவதற்காகவே வடயேமன் தனது தாக்குதலை தற்போது அதிகரித்துள்ளது.

ஏடனின் மின்நிலையம், எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடந்துள்ளது. வடயேமன் துருப்புகளின் தாக்குதல் அதிகரிப்பதால் தென்யேமன் துருப்புகளின் முன்னணிகாவல் நிலைகளிலிருந்து தென்யேமன் துருப்புகள் பின்வாங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தென்யேமன் படையினரின் பாரிய முகாம் ஒன்றும் வடயேமன் துருப்புகளிடம் வீழ்ந்துள்ளது

இதேசமயம் பலமணிநேர விவாதத்தின்பின் யேமன் உள்நாட்டுப்போரை நிறுத்துமாறு கோருவது என ஐ நா. பாதுகாப்புச்சபை தீர்மானம் எடுத்துள்ளது;

## தேர்தல் ஆணையாளரினால மைலாப்பூரில் விசாரணை

(சென்னை)

மைலாப்பூர் சட்டப் பேரவைத்தொகுதிக்கான இடைத் தேர்தலில் வாக்குப் பெட்டிகள் திறக்கப்பட்டிருந்ததாகவும், முறைகேடுகள் இடம் பெற்றிருந்ததாகவும் கூறப்படும் புகார்கள் தொடர்பாக துணைத்தேர்தல்ஆணையாளர் விசுவநாதன் மைலாப்பூரில் விசாரணை நடத்தினார்.

...லகம்
...ணம்
...ர் நினைவு நூலகம்.



## வெப்பக்காற்றால் 140பேர் பலி

(டில்லி)

இந்தியாவில் வீசிவரும் கோடைக்கால வெப்பக் காற்றினால் இதுவரையில் நூற்றி நாற்பது பேருக்கும் அதிகமானோர் பலியாகி இருப்பதாகவும், மேலும் நூற்றுக்கும் அதிகமானோர் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சித்திர கண்காட்சி

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை மாணவர்களின் சித்திரக் கண்காட்சி இன்றும் நாளையும் மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பாடசாலையில் நடைபெறும்.

இதில் நல்லூர் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வ. தானையா அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து ஆரம்பித்து வைப்பார்.

## பாதாள உலக 'யக்கடயா' தேடி பொலிசார் வலை

(கொழும்பு)

பல கொள்ளை, கொலை மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய எம். எச். குணசேகரா (யக்கடயா) என்பவரை குருநாகல் பொலிசார் தேடி வலைவிரித்துள்ளனர்.

மேலும் கெக்கிராவையைச் சேர்ந்த இந்நபரைப் பிடிப்பதற்கு பொதுமக்களை உதவும்படியும் சிறிலங்கா பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் இந்நபர் பாதாள உலக குற்றச் செயல் புரிந்தவர்களில் ஒருவர் எனவும் சிறிலங்கா பொலிசார் கருதுகின்றனர்.

## ஐ தே க வின் வெற்றியால் வியப்படைய போகின்றனர்

(கொழும்பு)

''சிலர் நினைப்பது போல ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எதுவித நெருக்கடியும் கிடையாது. எதிர்வரும் தேர்தல்கள் அனைத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி ஈட்டப் போகும் வெற்றிகள் எதிர்க் கட்சிகளை வியப்படையச் செய்யத் தான் போகிறது'' இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்தார்.

கம்பஹா தேர்தல் தொகுதியில் மாதிரிக் கிராமமொன்றை கடந்த சனிக்கிழமை திறந்து வைத்த பின்பு அங்கு அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பதவி ஏற்ற பின்பு வீடமைப்புத் திட்டங்களுக்கு அவர் ஆதரவு வழங்கி வருகிறார் இதில் பிரேமதாசாவின் கொள்கைகளையே டி. பி. ஜதுங்காவும் பின் பற்றி வருகிறார் என்றார்.

## மாவீரர் நினைவாக விளையாட்டுப்போட்டி

முல்லைத்தீவில் - பூநகரிச் சமரில் வீரச்சாவெய்திய 458 மாவீரர்களின் நினைவாக விளையாட்டுப் போட்டி மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்டு பின்பு இறுதிப் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை முல்லை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. இதில் வெற்றி சூடிய கழகங்களுக்கு லெப். கேணல் அன்புவின் அவர்களின் ஞாபகார்த்த சுற்றுக் கேடயமும் பரிசில்களும் வழங்கப்படும்.

## றுகுணு வந்தடைந்தது

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'றுகுணு' கப்பல் ஆயிரத்து 63 மெட்றிக் தொன் பொருள்களுடன் நேற்றுக் காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை துறைமுகம் வந்தடைந்தது.

இக் கப்பலில் தனியாருக்கு உருளைக்கிழங்கு, பருப்பு, பால்மா மற்றும் சீனி, லக்ஸ்பிறே, உழுந்து, சவர்க்காரம் என்னவும் வந்தன பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது.

நோயாளிகளை ஏற்றிக் கொண்டு 'பிளைங்பயேன்' என்ற கப்பல் இன்று காலை 5.30 மணிக்கு பருத்தித் துறைக்கு வரும் மாலையே நோயாளிகளை ஏற்றிக் கொண்டு புறப்படும்.

## உயர்தர முன்னோடிப் பரீட்சை

தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசா பிவிருத்திச் சங்கம் ஆண்டு தோறும் நடாத்தும் முன்னோடித் தேர்வுகள் திட்டமிட்டபடி நாளை வெள்ளிக்கிழமையும் அடுத்த நாள் சனிக்கிழமையும் நடைபெறும் தமிழ்ப் பாடத்துக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகமும் இந்துநாகரிகப் பாடத்துக்கு ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கமும் பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. நெல்லியடி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தேர்வுகள் நடைபெறும். அனுமதி அட்டைகள் உரிய பாடசாலைகட்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் தேர்வு நாடிகள் தேவையான எழுது தாள்களைத் தம்முடன் கொண்டு செல்லவேண்டுமெனவும் சங்கத் தலைவரும் யாழ்ப்பாணம் வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளருமான செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

## விசர்நாய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் இன்று நாய்களுக்கு...

## அரசாங்கத்தின்

இப் பொருள்கள் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமைச்சர் ஒருவர் தமது அமைச்சின் பின்புறத்தில் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பியட் ரக கார் ஒன்றை பாவனைக்கு உதவாது என்று ஒதுக்கி தமது சொந்த பாவனைக்கு ஏலவிற்பனை மூலம் கொள்வனவு செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் இக் கார் புத்தம் புதிய ரகத்தை சேர்ந்தது எனவும் கூறப்படுகிறது.

மேலும் பல அமைச்சுக்களிலும் இருந்து விலையுயர்ந்த பொருள்கள் பல இப்போது காணாமற் போயிருப்பதாக அதிகார பூர்வ வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

## பீரங்கி

போது வீடுகள் கட்டுமரங்கள் சேதமடைந்தன.

கடற் படையினரின் இத் தாக்குதலுக்கு அஞ்சி மீனவர்கள் கடலில் குதித்து கரையை வந்து சேர்ந்தனர். முனை, பருத்தித்துறை, இத்தும் பொலி...

15-வது பிறந்ததின வாழ்த்து

(2-6-1994)



## செல்வன் S. பிரதீபன்

மட்டனிப்பாய் சங்குவேலி வடக்கைச் சேர்ந்த செல்வச்சந்திரன்-தவமணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரதீபன் தனது பதினைந்தாவது பிறந்த தினத்தை 02-06-94 வியாழக்கிழமை ஜேர்மனியில் (Germany) உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா (Germany) ஐயா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சங்குவேலி மாமாமார், அன்ரிமார், சித்தப்பாமார், கந்தரோடை மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா (Germany) சித்திமார், பெரியப்பா (Germany சிவலிங்கராசா மாமா குடும்பத்தினரும் தெல்லிப்பழை துர்க்காதேவி துணையுடன் அருள் பெற்று பல கலைகளுடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

தங்க நகை மாடிமனை தேடாதே
நீ மாலையிட சீதனத்தைக் கேளாதே

## ஜெயின் குழுவின் விசாரணையிலிருந்து விலகிக்கொள்ள தி.மு.க. தீர்மானம்

(சென்னை)

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக ஆராயும் ஜெயின் விசாரணைக் குழுவின் விசாரணைகளிலிருந்து விலகிக் கொள்வதென திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.

கமிஷனிடம் தாக்கல் செய்யப்பட்ட கால வரம்பை ஜெயின் விசாரணைக் குழு குறைத்து விட்டதாகக் கூறி அதை எதிர்த்தே தி.மு.க. விசாரணைகளில் பங்கேற்க மறுப்பதாக புதுடில்லியில் நேற்று நடைபெற்ற விசாரணைக் குழுவின் அமர்வின் போது தி.மு.க. வழக்கறிஞர் கூறியுள்ளார்.

1983 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை ஆராயும்படி கமிஷன் முன்னிலையில் தி.மு.க. கோரியிருந்தது. ஆனால் கமிஷன் 1986 க்குப் பின்னரே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது தெரிந்ததே.

## ஜனநாயக

பெருகும் எமது ஆதரவு இல்லாமல் பொதுஜன ஐக்கிய முன்னணியால் ஆட்சிக்கு வர முடியாது. எனவே நாம் இம் முன்னணியை ஆதரிப்போம் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியிலிருந்து அகற்றுவோம் என்றார்.

மேலும் ''மறைந்த தலைவர் அத்துலத்முதலியின் கொள்கைகளை தொடர்ந்தும் கடைப்பிடிக்க முயல்பவர்கள் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து முறையற்ற விதத்தில் நீக்கப்படுகின்றனர். இந்த அநீதியை எதிர்க்க நாம் நீதிமன்றம் செல்வோம்''

லலித் அத்துலத்முதலி ஜனாதிபதி பிரேமதாசாவை எதிர்ப்பதற்கு மட்டும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஆரம்பிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை அகற்றவே அவர் முன்னணியை அமைத்தார் எனவே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை அகற்ற நாம் தொடர்ந்து போராடுவோம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர், ஐ.தே.கவில் இணைவதையும் தடுப்போம் என்று கலுகல்ல மேலும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி பிரதமர் பதவியைத் தந்தாலும் கூட நாம் ஏற்கமாட்டோம் ஐ.தே.கவில் ஒருபோதும் இணையவும் மாட்டோம் திருமதி சந்திரிகா குமாரணதுங்க நல்லதலைவி அவரது பொதுஜன ஐக்கிய முன்னணியை நம் முழுமையாக ஆதரிப்போம் என கலுகல்ல குறிப்பிட்டார்.

## வெளிநாடு செல்ல முயன்ற ஏழுபௌத்தபிக்குகள் கைது

போலிக் கடவுச் சீட்டுகள் மூலம் வெளிநாடு பயணம் மேற்கொள்ள முயன்ற பௌத்த பிக்குகள் ஏழு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இவ்வாறு போலிக் கடவுச் சீட்டு மூலம் வெளிநாட்டுக்கு செல்ல முற்பட்ட நோக்கம் தொடர்பாகவும் அதன் பின்னணி தொடர்பாகவும் குற்றபுலன் விசாரணைப் பிரிவினர் விரிவாக ஆராய்ந்து வருகின்றனர்.

## பொலிஸ்

குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சென்ற வருடம் மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி கொலை செய்யப்பட்ட இடத்தை ஒரு மணி நேரத்தில் கழுவி விடப்பட்டமையினால் தடயங்களை முழுமையாக பெறமுடியாத நிலை ஏற்பட்டது. எனவே இவ் விசாரணையை ஏற்கமுடியாது என பிரேமதாசா குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

லலித் அத்துலத் முதலி கொலை நடைபெற்ற போது அதனை விசாரிக்க ஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினர் பிரிட்டனில் இருந்து வரும் வரை இந்த இடம் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினர் இலங்கையில் கிக்கடுவையில் இருந்து வரும் வரை பாதுகாக்க முடியாமற் போனது வருத்தத்திற்குரியது

இதனைத் தொடர்ந்து அவரின் இறுதி மரண ஊர்வலத்தின் போது ஊரடங்கு சட்டம் போடப்பட்டு மக்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். இவை மூலம் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக மேலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

## தேசியப்

அமைச்சர் ஜோன் அமரதுங்க ஐ.தே.க பொது செயலர் காமினி விஜயசேகர ஆகியோருடன் சிறிசேன சென்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் பாராளுமன்றத்திற்குப் பிரவேசிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

றொனி டி மெல் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்த பின்னர் அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என்றும் அவ் வேளை பலரின் அமைச்சு பதவிகள் பறிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## காமினி

காரணம் என குற்றம் சாட்டி வந்த காமினி இப்பொழுது புலிகளேகாரணம்என 'பல்டி' அடிக்கிறார். டென்சில் கொப்பேகடுவ, ரஞ்சன் விஜயரட்ண ஆகியோரின் கொலைகளுக்கும் அவர் புலிகள் மீது குற்றம்சுமத்துகிறார்என்றார்.

## ஆறு தமிழர்கள் தேடப்படுகின்றனர்

ளுடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: R. சிவலிங்கசர்மா (மாமா)

(8443)


# தமிழீழ
# மாணவர் எழுச்சி நாள்
## 05. 06. 1994

சிங்களம் எங்களைத்
தரைமீது கிடத்தும்
எங்களின் கல்வியோ
வரலாறு படைக்கும்.

**அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்**

அச்சுவேலி மகாவித்தியாலயம்
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

(8444)



# தமிழீழ
# மாணவர் எழுச்சி நாள்
## 05. 06. 1994

**கல்வியும் நாடும் நம் இரு விழிகள்**
**குண்டுவீசிடினும் நிற்காது நம் கல்வி**

**அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்**

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

[8445]



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டுஜூன் மாதம் 02 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


யாழ். மா நகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் இன்று நாய் ஆளுக்கு விசர்நாய் நோய்த் தடு பூசி மருந்து ஏற்றவுள்ளனர்.

முற்பகல் 8 00 மணிதொடக்கம் 10. 00 மணிவரை ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையத்திலும், பலாலி வீதியில் அமைந்துள்ள கந்தர்மடம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 10 00 மணி தொடக்கம் 12. 00 மணிவரை கண்ணாபுரம் சனசமூக நிலையத்திலும், கல்லூரி வீதி கற்குளம் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2, 00 மணி தொடக்கம் 4 00மணிவரை நாவாந்துறை சென் நீக்கிளஸ் சனசமூக நிலயைத்திலும் நாவாந்துறை அண்ணா சனசமூக நிலயைத்திலும் ஏற்றப்படவுள்ளதாக யாழ். மா நகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்

## அதிபர் கூட்டம்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப்பாடசாலை அதிபர்கள் கூட்டம் இன்று வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு யூனியன் கல்லூரியில் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு க. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்


யாழ் ஸ்ரீதரில்
புரூஸ்லி நடித்த
**GAME OF DEATH**
தினசரி பி. ப. 4 00 மணி,
6.00 மணி
சனி, ஞாயிறு காலை
10 30 மணி
பி. ப. 4 மணி, 6 மணி
தினசரி பி ப. 2 30 மணி
காட்சி மட்டும்
ஏப்ரல் 94
ஒளிவீச்சு
(சி-9570)


கள் கடலில் குதித்து கரையை வந்து சேர்ந்தனர். முனை, பருத்தித்துறை, திக்கம், பொலிகண்டி ஆகிய பகுதிகள் மீதே இத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றது. மீனவர்கள் தமது மீன்பிடி பொருள்களை கடலில் கைவிட்ட நிலையில் கரைவந்து சேர்ந்தனர்.

## கருத்து

ஊர்காவற்றுறை ஆகிய நான்கு கோட்டங்களையும் சேர்ந்த 1-AB பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப் பெற்றுள்ளன அத்தகைய பாடசாலை அதிபர்கள் தம்முடன் 5 ஆசிரியர்கள், 5 மாணவ முதல்வர்கள் ஆகியோருடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அபிவிருத்திச் சபை ஆகியவற்றிலிருந்து 5 பிரதிநிதிகளையும் அழைத்து வருமாறு கேட்கப் பட்டுள்ளனர்

இதில் கல்வித் திணைக்கள அலுவலர்களும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களும் கலந்து கொள்ள உள்ளனர்

இக் கூட்டத்தின் மூலம் இருநேர பாடசாலைகள் பற்றிய நிலைப்பாடுகள் புரிந்துணர்வின் அடிப்படையில் சீராக்கம் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது

## பல்

ராட்சியில், ஹாட்லிக் கல்லூரியும், பருத்தித்துறை பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவர்களும் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

அத்தோடு, இருநேரப் பாடசாலைகளை ஆட்சேபித்து உயர்தர வகுப்பு மாணவர்கள் கல்வி அதிகாரிகளுக்கு மகஜர்கள் அனுப்பி வைத்ததாகவும், இம்மகஜர்களில் இருநேரப் பாடசாலைகளினால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றது.

ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்-

குற்றஞ்சுமத்துகிறார் என்றார்,

# ஆறு தமிழர்கள் தேடப்படுகின்றனர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொலை தொடர்பாக மேலும் ஆறு தமிழர்கள் தேடப்பட்டு வருவதாக இது தொடர்பான விசாரணைகளை நடத்தும் சிறிலங்காவின் குற்றப்புலன் விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்

தற்போது நடைபெற்று வரும் விசாரணை மூலம் இவர்கள் தொடர்பாக தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் இவர்களை கைதுசெய்ய பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும் அப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்

## கலந்துரையாடல்

கர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 4ஆம் திகதி பி. ப 3.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## சிறுபான்மை

தெரிவிக்கையில் இவ்வாறு உருப்படியான திட்டம் இன்மையினால் வடக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சிறுபான்மை மக்கள் மேலும் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் இதனால் இன்று அவர்கள் பிரதான கட்சிகள் மீது நம்பிக்கை வைப்பதற்கு கூட தயாராக இல்லை எனவும் தெரிவித்துள்ளார்

## வெளிவிவகார

வைத்துள்ளார்.

இந்த நிலையில் அமைச்சர் ஹமீத் தொடர்பாக ஜனாதிபதி கடுமையான நிலைப்பாடொன்றை மேற்கொள்ளலாம் எனவும், அதனால் அமைச்சர் பதவி விலக நிர்ப்பந்திக்கப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் பலமான பேச்சு அடிபடுகின்றது


# கண்ணீர் அஞ்சலி
## திருமதி பராசக்தி பாலச்சந்திரன்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளை உப முகாமையாளர் திரு. வே. பாலச்சந்திரன் அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி பராசக்தி பாலச்சந்திரன் அவர்களின் பிரிவு கேட்டு வேதனையுறுகின்றோம். அன்னாரது பேரிழப்பால் துயரில் தோய்ந்துள்ள அவரது குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் திருமதி பா. பராசக்தி அவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நோய் நீங்கி வருவாயென்று
நோக்கி வழி காத்திருக்க
தாய் போன செய்தி கேட்டு
தவிப்பவர்க்கு என் சொல்வோம்?

நண்பரது துயரோடு
நாம் பங்கு கொள்ளுகின்றோம்.
அன்பனே உங்களுக்கெம்
அகமாழ்ந்த அனுதாபம்

முகாமையாளர்,
ஊழியர்கள்.

இலங்கை வங்கி,
(ஸ்ரான்லி வீதிக் கிளை)
யாழ்ப்பாணம்.

(8446)